இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இணையப் பாதுகாப்பு குறித்து இந்தியா - இலங்கை ஆலோசனை

CERT India தலைமை இயக்குநர் டாக்டர் சஞ்சய் பாஹ்ல் மற்றும் இந்திய வெளியுறவு துறை அமைச்சின் இணைச் செயலாளர் (Cyber Diplomacy) திரு. அமித் சுக்லா ஆகியோர் அடங்கிய குழுவினர், முதல் முறையாக இணைய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டமொன்றிற்காக கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். இந்த விஜயமானது டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் துறைகளில் மேற்கொள்ளப்படும் இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது.

2. இந்த விஜயத்தின் போது, அக்குழுவினர் டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் கௌரவ எரங்க வீரரத்ன அவர்களைச் சந்தித்து, இணைய பாதுகாப்பு முகமை கட்டமைப்புகள், இணையப் பாதுகாப்பிற்கு செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் சவால்கள், அச்சுறுத்தல் மீளாய்வுகளை பகிர்ந்துகொள்ள வேண்டியதன் அவசியம் மற்றும் திறன் விருத்தி, இணைய அச்சுறுத்தல்களை முறியடித்தல் மற்றும் மீட்சி உள்ளிட்டவற்றில் CERT-India பின்பற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவை குறித்து கலந்துரையாடியிருந்தனர்.

3. அத்துடன், இக்குழுவினர் தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் துறை பிரதி அமைச்சருமான கௌரவ டாக்டர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ அவர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இச்சந்திப்பின்போது, பாதுகாப்பான நிதி முறைமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் என்ற பொதுவான இலக்கை அடைவதற்கான சூழலில் இணைய பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒத்துழைப்பு குறித்து அவர்கள் கலந்துரையாடியிருந்தனர். இதேவேளை, அறிவுப் பரிமாற்றம், திறன் விருத்தி, இணைய நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பல்வேறு தேசிய அளவிலான தந்திரோபாயங்களை உருவாக்குதல் போன்ற ஒத்துழைப்புக்கு சாத்தியமான துறைகள் குறித்து, இலங்கை CERT இன் தலைவர் திரு. திலக் பத்திரகே மற்றும் அதன் பிரதம நிர்வாக அதிகாரி டாக்டர் கனிஷ்க கருணாசேனா ஆகியோருடன் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

****

கொழும்பு
06 அக்டோபர் 2026